தொழிற்கல்வியைத் தேடுவதில் நிராகரிப்பை சகிக்கப் பழகுதல்

ஒரு தொழிலுக்கு ஆள் தேடப்படும்போது, அதிகமாக பல நபர்கள் அதற்கு விண்ணப்பிப்பார்கள். அவர்களுள் ஒருவர்தான் அந்த இடத்தைப் பெற்றுக்கொள்வார், மிகுதி அனைவருக்கும் அது கிடைக்காது. இது தொழிற்கல்விக்கு வேறுபட்டது அல்ல. ஒவ்வொரு பிரதேசம் மற்றும் தொழிலுக்கு விண்ணப்பிப்பதைப் பொறுத்து குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கும், சிலவேளைகளில் ஒரு தொழிற்கல்வி இடத்திற்கு பல விண்ணப்பங்களும் செய்யப்படுவதுண்டு. பலர் தொழிற்கல்வி இடத்திற்குத் தகுதியாக இருப்பினும், அவர்களும் நிராகரிப்பை எதிர்பார்க்க வேண்டும்.

தொழிற்கல்வி இடத்தைத் தேடும்போது நிராகரிக்கப்படுவது வழமைக்கு மாறானது அல்ல என்பதுடன் அது நிச்சயமாக உங்களோடு மட்டும் தொடர்புபட்டது அல்ல: ஆகவே நீங்கள் மனச்சோர்வடையாதீர்கள். சிலவேளைகளில் அவர்களது நிராகரிப்புக்கான காரணம் உங்களில் தங்கியிருக்காமல் இருக்கலாம்:

- நிறுவனத்திற்கு விண்ணப்பங்கள் வந்து குவிந்திருக்கலாம் அத்துடன் மிகத் திறமையானவர்களை மட்டும் (பாடசாலைப் பெறுபேறுகளைப் பொறுத்து) தேர்ந்தெடுத்திருக்கலாம்.
- விருப்பமான தொழில் எனும்போது பொதுவாக குறைவான தொழிற்கல்வி இடங்களே இருந்திருக்கும்.
- நீங்கள் வாழும் பிரதேசத்தில் விருப்பமான தொழிலுக்கு மிகக் குறைவான இடங்கள் மட்டுமே இருக்கலாம்.
- நீங்கள் ஒரு "கனவுமயமான தொழிலுக்கு" விண்ணப்பித்திருக்கலாம் - அதற்கு போட்டி விசேடவிதமாக அதிகமாக இருந்திருக்கலாம்.
- உங்கள் விண்ணப்பம் பிந்திக் கிடைத்திருக்கும், ஆகவே தொழிற்கல்வி இடம் முன்பாகவே வழங்கப்பட்டிருக்கலாம்.

யுக்திகள்:

- உங்கள் விண்ணப்பப்படிவத்தை பரிசோதிப்பதுடன் உங்களுக்குத் தெரிந்தவர்கள் வட்டத்தில் எவருடனாவது அல்லது துறைசார் நபர்களுடன் இதுகுறித்துக் கதையுங்கள். உங்கள் விண்ணப்பம் (முழுவதும் நிரப்பியபடி, எழுத்துப்பிழையில்லாது, விளக்கமாக) ஒழுங்காக உள்ளதா? எதை நீங்கள் சிறப்பாக்கலாம் அல்லது மேலும் மாற்றியமைக்கலாம், இதன்மூலம் ஏனைய விண்ணப்பங்களுடன் ஒப்பிடும்போது விசேடமானதாக இருக்கும்?
- மீண்டும் நீங்கள் உங்களது நேர்முகக் கலந்துரையாடலை ஞாபகப்படுத்துவீர்களா. எது நன்றாக நடந்தது, எது இல்லை? அடுத்த தடவை எதை நீங்கள் வேறுமாதிரி, சிறப்பாகச் செய்யலாம்? இவ்வாறான கலந்துரையாடலைப் பழகிக் கொள்ளுங்கள்:
- உங்கள் அனுபவங்கள் குறித்து உங்களது பெற்றோர்கள், ஆசிரியர்கள், தொழில் ஆலோசகர்கள் மற்றும் நண்பர்கள் மற்றும் நண்பிகளுடன், தொழிற்கல்வி இடத்தைத் தேடும் வேறு நபர்களுடன் கதையுங்கள்.
- தொழிலகங்களில் உங்களை ஏன் அவர்கள் கவனத்தில் எடுக்கவில்லை என்பதை நம்பிக்கையுடன் கேட்டறிந்து கொள்ளுங்கள், இதற்கு எவராவது உங்களுக்கு உதவிசெய்யலாம்.
- எவரும் ஒரு தொழிலுக்காக மட்டும் படைக்கப்படவில்லை. நீங்கள் விண்ணப்பித்த தொழிலுடன் சம்பந்தப்படும் தொழில்களை அவதானியுங்கள், அதற்குப் பதிலான வேறு தொழிற்கல்வி வழிகளை யோசியுங்கள், இவையும் உங்கள் குறிக்கோளை அடைய உதவலாம். இதற்காக நீங்கள் தொழில் ஆலோசனை நிலையம் மற்றது தொழில் தகவல் நடுநிலையம் போன்றவற்றைப் பயன்படுத்துங்கள். நீங்கள் புதியவற்றை அறிய ஆவல் கொள்ளுங்கள்!

மிக முக்கியமானது

கைவிட்டுவிட வேண்டாம், மாறாக முயன்று கொள்வதுடன் தொடர்ந்து விண்ணப்பியுங்கள். தேடப்படும் தொழிற்கல்வி இடங்களை நீங்கள் இணையத்தளத்தில் காணலாம்.